UNIVERSAL
FOR GOD AND COUNTRY
யூனிவேர்சல்
கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 2-50

# முரசொலி

முரசு 04 ஒலி 142 வியாழன் 05-07-1990 (ஆனி 21) துல்ஹஃதா 11

UNIVERSAL
FOR GOD AND COUNTRY
யூனிவேர்சல்
கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

# திருமலையில் 3000 தமிழர் ராணுவம் சிறைபிடிப்பு!

## முன்னதாக 60 பேர் கொலை பெண்கள் மானபங்கம்

திருகோணமலையில் இராணுவத்தினர் தமிழர்கள் மீது கடும் தாக்குதல்களை நடத்திவருவதாக அறிவிக்கப்படுகிறது. அகதிகளானோர் மீது தாக்குதல் நடத்திவரும் அவர்கள் மூவாயிரம் தமிழ்பேசும் மக்களைச் சிறைபிடித்து வைத்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இச்சம்பவங்கள் பற்றித் தெரியவருவதாவது; திருகோணமலை மாவட்டத்தில் படையினரதும், குண்டர்களினதும் தாக்குதலுக்கு உள்ளாகி ஏற்கனவே அகதிகளாகி தம்பலகாமம் பகுதியில் அடைக்கலம் புகுந்திருந்த தமிழ் பேசும் மக்களில் நானூறுக்கும் அதிகமானோரைப் பிடித்து மனித கவசமாக்கிக் கொண்டு சூரன்கல் என்னும் இடத்தை நோக்கி முன்னேறிய படையினர் தாம் பிடித்து வைத்திருக்கும் அகதிகளில் இருபத்து எட்டு இளம் பெண்களை மானபங்கப்படுத்தியதுடன் 60க்கும் மேற்பட்ட தமிழ் பேசும் மக்களைச் சுட்டுக்கொன்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சூரன்கல் பகுதியில் மூவா

—04ஆம் பக்கம் பார்க்க

## பலாலியில் இருந்து புறப்பட்டதும் ஹெலிகளின் சரமாரிச் சூடு

பலாலி இராணுவ முகாமைச் சுற்றியுள்ள பகுதிகளில் செல்லும் வாகனங்கள் மீது ஹெலிகள் சரமாரித் தாக்குதல் நடாத்துகின்றன.

ஹெலிகள் கோட்டை இராணுவ முகாமுக்கும், மற்றைய இராணுவ கடற்படை முகாம்களுக்கும் செல்லும் போதே இத்தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன.

ஊரெழு, மானிப்பாய் தாவடி, வசாவிளான், குரும்

—04 ஆம் பக்கம் பார்க்க

## மண்டபம் முகாமில் 4400 அகதிகள்

## பட்டினிச் சாவுக்கு அஞ்சி தஞ்சம் அடையும் தொகை கூடும்?

தமிழ் நாட்டுக்கு தப்பிச் செல்லும் அகதிகளின் எண்ணிக்கை கடந்த சில தினங்களில் பெருமளவு அதிகரித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை மட்டும் 200 குடும்பங்களைச் சேர்ந்த 788 பேர் வடக்கு, கிழக்குப் பகுதிகளிலிருந்து அகதிகளாக இராமேஸ்வரத்தைச் சென்றடைந்துள்ளனர்.

இவர்களையும் சேர்த்து மண்டபம் முகாமில் உள்ள இலங்கை அகதிகளின் எண்ணிக்கை 4400 ஆக உயர்ந்துள்ளது.

### பிந்திய செய்தி

விமானத் தாக்குதல்களும் மற்றும் தாக்குதல்களும் நீடிப்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## படுகொலை நிறுத்தப்பட்டு யுத்தநிறுத்தம் தேவை இ. காங்கிரஸ் வலியுறுத்து

''வடக்கு, கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் ஸ்ரீலங்கா ஆயுதப்படைகளால் படுகொலை செய்யப்படுவதை நிறுத்தப்பட வேண்டும், அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் நிறுத்தம் ஒன்று உருவாக வேண்டும்''

இவ்வாறு தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி நேற்று கோரிக்கை

— 04ஆம் பக்கம் பார்க்க

## 'நீதியான நிவாரணம் தமிழர்க்கு அவசியம்'

''பாதிக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் நீதியான நிவாரண உதவிகள் கிடைக்க வழிவகை செய்யப்பட வேண்டும்'' இராஜீய வழியிலேயே இலங்கைப் பிரச்சனைக்கு தீர்வு காணவேண்டும் என்றும் பாரதீய ஜனதாக் கட்சியின் முக்கிய பிரமுகர் திரு, மா

— 04ஆம் பக்கம் பார்க்க

## 900 படையினர் இதுவரை பலி

வடக்கு கிழக்கில் விடுதலைப் புலிகளுடனான மோதலில் இதுவரை 260 படையினர் பலியானதாகவும் 640 படையினர் காணாமல் போனதாகவும் 450 பேர் காயமடைந்ததாகவும் ஜனாதிபதி பிரேமதாஸ நேற்றுத் தெரிவித்துள்ளார்.

## ஓடு பாதை சேதம்

பலாலி விமான நிலையத்தின் ஓடு பாதையின் ஒரு பகுதி சேதமாக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் முகாமை நோக்கி நடாத்திய ஷெல் தாக்குதலினாலேயே ஓடு பாதை சேதமடைந்ததாகத் தெரியவருகிறது.(48)

## மாடு மேய்த்தவரும் துடித்துமடிவு

## அம்பாறையிலும் கொலை தொடர்கிறது 15 வீடுகளும் தீக்கிரையாகின

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறையில் கடந்த 25ம் திகதி 85 தமிழ்பேசும் மக்களையும் முதலாம் திகதி 57 தமிழ் பேசும் மக்களையும் படையினர் சுட்டும் வெட்டியும் கொன்றுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

துறைநீலாவணை, சவளக்கடை ஆகிய பகுதிகளில் கடந்த 26ம் திகதி 6 பேரும் 30ம் திகதி 6 பேருமாக 12 தமிழ் பேசும் மக்களைப் படையினர் சுட்டுக் கொன்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சொரிக்கல்முனை என்னும் இடத்தில் 3 தமிழ் பெண்களை மானபங்கப்படுத்திய படையினர் அப்பகுதியில் 15 வீடுகளையும் எரித்தனர் எனவும் அறிய வந்துள்ளது.

3ம் திகதி வாகனேரி என்னும் இடத்தில் மாடு மேய்த்துக் கொண்டிருந்த முகைதீன் பாவா அகமது லெப்பை என்பவர் இராணுவத்தினரால் துடிதுடிக்க சுட்டுக் கொல்லப்பட்டார் என்றும் அருகில் நிறை அகமது லெப்பை அமர்கான் என்பவர் காயமுற்றார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ)

## ஈழவேந்தன் இந்தியாவிடம் கோரிக்கை

## விடுதலைப் புலிகளுக்கு விமான எதிர்ப்பு ஆயுதம் வழங்குக

இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் ஸ்ரீலங்கா விமானப்படையினர் வான் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளதால் விமானஎதிர்ப்புப் பீரங்கிகளை விடுதலைப் புலிகளுக்கு இந்தியா வழங்க வேண்டும் என தமிழீழ விடுதலை முன்னணியின் பொதுச்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். போதனா வைத்தியசாலை சனிக்கிழமை முதல் மீள இயங்கும்?

(எஸ். ஆர். எம்)

யாழ் போதனா வைத்தியசாலை எதிர் வரும் சனிக்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளது எனத் தெரியவருகிறது. தெற்கான துரித நடவடிக்

நிர்வாகம் மேற்கொண்டுள்ளது.

மானிப்பாய் வைத்தியசாலையில் இட நெருக்கடிகள் ஏற்பட்ட காரணத்தினாலும், அத்தியாவசிய தேவைகளு

தியசாலைக்கே ஊழியர்கள் வந்து போவதினாலுமே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எதிர் வரும் வெள்ளிக்கிழமை இது சம்பந்தமான

வுள்ளது. டாக்டர்கள் ஊழியர்களின் தீர்மானத்தின் அடிப்படையிலேயே இவ் வைத்தியசாலை ஆரம்பமாகவுள்ளது. சனிக்கிழமை அன்றே நோயாளர்

## பலாலியில் சூடு போராளி வீரமரணம்

நேற்று பலாலி இராணுவ முகாமில் இருந்து ஷெல் வீச்சுக்கள் மேற்கொள்ளப்ப

# சிறிய செய்திகள்

## ஹெலிக்குத் தப்பியவர் ஆற்றுக்குப் பலி

ஹெலி சுட்டபோது தன்னைக் காப்பாற்றிக் கொள்ள ஆற்றில் இறங்கியவர் சேற்றில் புதையுண்டு மரணமானார்.

இந்த பரிதாப சம்பவம் அண்மையில் மட்டக்களப்பின் மாங்காட்டில் இடம்பெற்றது. இதில் மரணமானவர் மாணிக்கம் சுந்தரம் (வயது 38)

மீன்பிடிக்க ஆற்றுக்கு சென்று கொண்டிருந்த போது ஹெலிக்கப்டர் இவரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாம். பதட்டமடைந்தவர் தனது உயிரைப் பாதுகாத்துக் கொள்ள ஆற்றங்கரையினுள்புகுந்துஒளிந்தவர் வெளிவிரவில்லை. கிராமத்தவர் ஹெலி சென்றதும் சம்பவம் நடந்த இடத்தில் தேடுதல் நடத்தியபோது நபர் பிணமாக மீட்கப்பட்டார். இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையாவர். (ப - 11 கி)

## உச்சநிலை அச்சம்

(மட்டுவில்)

தற்போது நிலவும் நெருக்கடி நிலையில் கொழும்பில் வாழும் தமிழர்கள் தமது இல்லங்களில் உறவினர்களாக இருந்தாலும் கூட யாழ்ப்பாணத்தவர்க்கு இடமளிக்க அச்சம் கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிசாரின் சந்தேகக் கண் தம் பக்கமும் திரும்பி விடுமோ என்ற கிலேசமே இதற்குக் காரணமாம். (ஸ்ரீ)

## விலை வீழ்ச்சி

சாவகச்சேரிச் சந்தையில் நேற்று மரக்கறிகளின் விலைகள் மிக வீழ்ச்சியடைந்திருந்தன.

கத்தரிக்காய் கிலோ ஐந்து ரூபாவாகவும், பீற்றூட் நான்கு ரூபாவாகவும், பயிற்றங்காய் பன்னிரண்டு ரூபாவாகவும் விலை போயின. (ஸ்ரீ)

## போக்குவரத்து ஸ்தம்பிதம்

ஆனையிறவு இராணுவ முகாம் ஊடாக கிளிநொச்சி செல்லும் தனியார் பஸ்களின் சேவை கடந்த இருதினங்களாக ஸ்தம்பிதமடைந்துள்ளது,

நேற்று முன்தினமும் நேற்றும் இடம்பெற்ற ஷெல் வீச்சுக்களினாலும் துப்பாக்கிப் பிரயோகத்தினாலுமே இச்சேவை ஸ்தம்பிதமடைந்துள்ளது. (03)

## கிராமங்களை நோக்கி...

தற்போது இடம்பெயர்ந்து வரும் மக்களில் பெரும் பகுதியினர் கிராமப் புறங்களில் உள்ள பாடசாலைகள், ஆலயங்களிலேயே தஞ்சமடைந்திருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

நகர்ப் பகுதிகள் எந்த நேரமும் விமானங்கள், ஹெலிகளால் தாக்கக்கூடும் என்ற அச்ச உணர்வே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப் படுகின்றது, (ப. 3கி)

## பிரதேச அலுவலகம் இடமாற்றம்

காங்கேசன்துறை பிரதேச சபை உப அலுவலகம் மல்லாகம் கிராமசபை அலுவலகத்திற்கு தற்காலிகமாக இடம் மாற்றம் செய்[illegible]ள்ளது.

## முல்லைத்தீவில் வைத்தியர்கள்

முல்லைத்தீவு வைத்தியசாலை இன்றுமுதல் இயங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவு வைத்தியசாலையில் கடமைபுரியும் வைத்தியர்கள் நேற்று முல்லைத்தீவுக்கு சென்றுள்ளனர்.

இதற்கான ஒழுங்குகளை செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொண்டது. மருந்துவகைகளும் அனுப்பிவைக்கப் பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (03)

## தெல்லிப்பழை மருத்துவமனையில் நோயாளர் இல்லை

கடந்த வாரம் தெல்லிப்பழையில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களையடுத்து தெல்லிப்பழை அரசினர் மருத்துவமனை வெறிச்சோடிக் காணப்படுகிறது.

வெளிநோயாளர் பகுதியிலும் வார்ட்டுகளிலும் நோயாளர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. (48- கி)

## புத்தளத்தில் யாழ். லொறி கொள்ளை

கொழும்பிலிருந்து யாழ். நோக்கி வந்து கொண்டிருந்த லொறியொன்று புத்தளத்தில் வைத்து வழி மறிக்கப்பட்டு அதில் கொண்டுவரப்பட்ட பொருட்கள் அபகரிக்கப்பட்டுள்ளது.

அபகரிக்கப்பட்ட பொருட்கள் மூன்று லட்சம் ரூபாவுக்கு மேல் பெறுமதியுடையவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

வெளிநாடொன்றிலிருந்து நாடு திரும்பிய ஒருவருக்கு இந்த பொருட்கள் சொந்தமானவையெனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (கி)

## இடமாற்றம்

காங்கேசன்துறை தபால் அலுவலகம் துர்க்காபுரத்திற்கு தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## பாடசாலைகள் மூடப்பட்டன

வட்டுக்கோட்டை, சுழிபுரம் ஆகிய இரு கொத்தணியின் கீழ் இயங்கும் சகல பாடசாலைகளும் 27-ம் திகதிமுதல் மூடப்பட்டுள்ளன.

நாட்டின் தற்போதைய சூழ்நிலையும், மாணவர் வரவு குறைவும், போக்குவரத்து வசதியின்மையுமே இதற்குக் காரணங்களாகக் கூறப்படுகின்றது.

அத்துடன் அநேகமான பாடசாலைகளிற் பல்வேறு பகுதிகளிலும் இருந்து இடம் பெயர்ந்து அகதிகளும் வந்துள்ளனர். (ப. 1ஸ்ரீ)

## அந்த நாள் ஞாபகம்...

(கீரிமலை)

மாவுக்குத் தட்டுப்பாடு நிலவுவதனால் பேக்கரி வாசல்களில் காலை வேளையில் நீண்ட கியூவைக் காணமுடிகிறது.

இதனை அவதானித்த ஒருவர் 'அந்த நாள் ஞாபகம் வந்ததே' என்றார். (48 கி)

## 1000 ரூபா முற்பணம்

மட்டக்களப்பு அரச செயலக ஊழியர்களுக்கு ஜூன் மாத வேதனத்திற்கு பதிலாக ஆயிரம்ரூபா முற்பணம்கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப் பட்டதாக அறிவிக்கப்பட் (கி)

---

வடக்கு கிழக்கு

# 'மாகாணசபைத் தேர்தலை நடாத்த இதுவே தக்க தருணம்' -ஜனாதிபதி

வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு தேர்தல் நடாத்த இதுவே தக்க சமயம் என ஜனாதிபதி பிரேமதாஸ தெரிவிக்கின்றார்.

பல்லேகலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவத்தில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

'வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு தேர்தல் நடாத்த வேண்டுமென விடுதலைப்புலிகளே கோரிக்கை விடுத்தார்கள்'

தற்பொழுது வடக்கு கிழக்கில் அரசபடைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே யுத்தம் நடைபெற்றுவருகின்றது.

தேர்தலை நடாத்த இதுவே தக்க சமயமென நாம் கருதுகின்றோம்.

இத்தேர்தலை நடாத்துவதற்கான சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன' எனவும் ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

திருகோணமலையிலிருந்தும், மட்டக்களப்பிலிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகளாக வடக்கை நோக்கி வந்து கொண்டிருக்கும் இவ்வேளையில், கிழக்கு மாகாணத்தில் தமிழ் வாக்காளர்கள் இல்லாத நிலையையே மாகாணசபை தேர்தலை நடாத்த அரசு தக்கதருணமாகக் கருதுகிறதா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். (கி)

## தாயகம் வந்தவர் தவிக்கின்றனர்

(மூளாய்)

நாடு சீராகவுள்ளதால் தாயகம் சென்று வரலாமென எண்ணி இங்கு வந்த பலர் நிர்க்கதியாகியுள்ளனர்.

கனடா, ஐரோப்பிய நாடுகள், அரேபிய நாடுகளிலிருந்து வந்து தற்போதைய சீரற்ற சூழ்நிலையினால் திரும்பவும் தத்தமது இடங்களுக்கு உரிய நேரத்தில் செல்ல முடியாதவர்கள் பல்வேறு வழிகளில் கொழும்புக்குச் செல்ல எத்தனித்தும் பலனளிக்கவில்லை.

பலரது விசா காலம் முடிவடைந்து விட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ப-1கி)

## க.பொ.த. பரீட்சை பெறுபேறுகள் தாமதமாகும்

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரண தரப்பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாவதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மோதல் நிலையினாலேயே இத்தாமதம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. (கி)

## கடைகள் தீக்கிரை

காத்தான்குடியில் எழுபது கடைகள் கொள்ளையிடப் பட்டுள்ளன. அத்துடன் மூன்றுகடைகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

## ஜன நடமாட்டம் இல்லாத காங்கேசன்துறை

காங்கேசன்துறை மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் காணப்படுகிறது. காங்கேசன்துறைப் பகுதி மக்கள் அனைவரும் வெளியேறிவிட்டார்கள். பயங்கர அமைதி அங்கு நிலவுகின்றது.

அந்தப் பகுதியில் உள்ள அரச அலுவலகங்கள், வங்கிகள், பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன.

ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட ஆயிரம் ரூபா முற்பணம்கூட வங்கிகள் இயங்காததால் காங்கேசன்துறை, தெல்லிப்பழை, அம்பனை, கொத்தணியைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தெல்லிப்பளைக்கு அப்பால் மக்கள் இல்லாமையால் அவர்களால் வளர்க்கப்பட்ட மிருகங்கள் இறந்து கிடப்பதனைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இவைகளில் இருந்து துர்நாற்றம் வீசிக் கொண்டிருக்கின்றது. இறந்து போன மிருகங்களை எடுத்து புதைப்பதற்குகூட ஆட்களே இல்லாத நிலை இங்கு காணப்படுகின்றது. (ப10 ஸ்ரீ)

அல்லலுறும் மாணவர்க்கு உதவ

## துணைவேந்தர் இயன்றளவு உதவி நடவடிக்கை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விடுதிகளிற் தங்கியிருந்து பயின்றுவருகின்ற' வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மாணவர் - மாணவியரின் தற்போதையநெருக்கடிகாலப் பொருளாதாரச் செலவுகளை நிவர்த்தி செய்யும் வண்ணம் துணைவேந்தர் உதவி நிதியத்திலிருந்து கடனடிப்படையிற் பணம் வழங்கப்பட்டு வருகின்றது.

ஏறத்தாழப் பத்து இலட்சம் ரூபாய்களை வைப்புநிதியாகக் கொண்ட இந்தத் துணைவேந்தர் உதவிநிதியத்திலிருந்து, மாணவர்-மாணவியரின் மட்டுப்படுத்தப்பட்ட செலவினங்களுக்கேற்ப, முதற்கட்டமாக ஒருவருக்கு, ஒரு வாரத்திற்கு 200/- ரூபா வழங்கப்பட்டு; அடுத்தகட்டமாக ஒருவாரத்திற்கு, ஒருவருக்கு 300/- ரூபா வழங்கப்பட்டு வருகின்றது.

தொலைதூர இடங்களிலுள்ள தமது பெற்றோர்கள் உற்றார், உறுவினர்கள் ஆகியோரிடமிருந்து தொடர்புகளை முற்றாக இழந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்-மாணவியரின் அவசரமானதும், அவசியமானதுமான பணத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு, இத்துணைவேந்தர் உதவிநிதியம் பெரிதும் பயன்படுகின்றதென யாழ்பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர், அ. துரைராசா ''முரசொலி'' யிடந் தெரிவித்தார்.

அவர்மேலும் ''முரசொலி'' நிருபரிடம் கருத்துத்தெரிவிக்கையில்:- ''யாழ் பல்கலைக் கழகத்திற்கெனவெளிநாடுகளிலிருந்து ஆண்டுதோறும்கிடைத்துவரும் பல்லாயிரக்கணக்கான ரூபா கொண்ட நிதியுதவிகள் யாவும், இன்றைய அபாயகரமான நெருக்கடிமிகுந்த காலகட்டத்தில் முற்றாகத் தடைப்பட்டுப் போயுள்ளன. சுமார் 6,500 ஸ்ரேலிங் பவுண்ஸ் பிரிட்டிஷ் பண உதவி யாழ்.பல்கலைக்கழக நூல் நிலையத்திற்கென வழங்கப்படவிருந்து, பின்னர் நாட்டுச்சூழ்நிலையால் முழுவதும் தடுக்கப்பட்டுள்ளது.'' என்று கூறினார். (60ஸ்ரீ)

யாழ். நோக்கி வந்த

## மட்டு. மாணவர் நிலைபற்றி இதுவரை தகவல் இல்லை

யாழ். நோக்கிவந்து இடையில் காணாமல் போன மட்டு பல்கலைக்கழக மாணவர்கள் 50 பேரினதும் நிலை என்ன என்பது பற்றி இதுவரை தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்று யாழ். பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ் 50 மாணவர்களினதும் நிலை பற்றி அறியுமாறு பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவிற்கு அறிவித்தல் கொடுத்த போதிலும் எதுவித பதிலும் இதுவரை கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இது பற்றி யாழ். பல்கலைக் கழகத்தில் நேற்று மாணவர் ஒன்றியத்தால் நடத்தப்பட்ட கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இக் கூட்டத்தில் காணாமல் போன 50 பல்கலைக் கழக மாணவர் நிலை பற்றி வருத்தம் தெரிவிக்கப்பட்டது, அவர்கள் நிலை பற்றி உடன் தகவல் தரப்பட வேண்டுமெனவும் கோரப்பட்டது. (64 கி)

## சாவகச்சேரி வங்கிகளில் மட்டுப்படுத்தப்பட்ட சேவை

சாவகச்சேரி இலங்கை வங்கி மக்கள் வங்கிக் கிளைகள் காலை 9.00 மணி தொடக்கம் 10.30 மணிவரை வங்கி நடவடிக்கைகளுக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி வங்கிக் காசோலைகள் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படுவதாகவும், பணப்புழக்கம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. (ப-3கி

அரசாங்க அறிவிப்பு இது

## இரு வார மோதலில் 318பேர் பலி 305 படையினர் காயம்

மன்னார்-புத்தளம் பாதையில் மறிச்சுக்கட்டி என்ற இடத்தில் இடம்பெற்ற மோதலில் இரண்டு இராணுவத்தினர் பலியானதாகவும், மூன்று பேர் படுகாயமுற்றதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதே வேளை கடந்த இரண்டு வார காலமாக வடக்கு-கிழக்குப் பகுதிகளில் இடம் பெற்றுவரும் மோதலில் பொலிஸார் உட்பட 318 படையினர் மரணமடைந்துள்ளதாக அரசாங்கம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மோதல்களில் 305 படையினர் காயமடைந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (கி)

# உடமைகளை இழந்த நிலையில் உயிரைக்காக்க ஓடி வந்தோம்

திட்டமிட்ட குடியேற்றத்தின் மூலம் தமிழர் தாயகத்தின் ஒரு பகுதியான கிழக்கு மாகாணத்தை ஆக்கிரமித்து கொண்ட சிங்கள பேரினவாதம் காலத்திற்குக் காலம் ஆயுத படைகளின் உதவியுடன் அப்பாவித் தமிழர்களைத்தாக்கி அவர்களின் தாயக பூமியை அபகரித்துக் கொள்கின்ற சம்பவங்கள் இன்று, நேற்று ஆரம்பமானதல்ல.

1956-ம் ஆண்டிற்குபின் காலத்திற்குக்காலம் தொடர்கின்ற தாக்குதல்களினாலும், 1983-ம் ஆண்டிலும், 1985-ம் ஆண்டிலும் ஆயுதப்படைகளின் உதவியுடன் சிங்களக்காடையர்களின் அட்டகாசத்தால் திருகோணமலை மக்களில் 60 வீதமானவர்கள் அகதிகளாக்கப்பட்டு இந்தியாவுக்கு இடம் பெயர்ந்தார்கள்.

ஆனால் கடந்த 13-ந் திகதிக்குப்பின் திருகோணமலையில் ஆயுதப்படைகளின் நடவடிக்கையால் அங்கிருந்து 90 வீதமானவர்களும் வெளியேறி விட்டார்கள். வெளியேறாது இருந்தவர்களுக்கு என்ன நடந்தது என்பது இதுவரை யாருக்கும் தெரியாத மர்மம்.

கிழக்கு மாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்து உடைமைகள் அனைத்தையும் இழந்த நிலையில் உயிரை மட்டும் காப்பாற்றிக்கொள்ள சுமார் 20 ஆயிரம் பேர் வடமராட்சியிலும், வடமராட்சிக் கிழக்கிலும் அகதிகளாகத் தஞ்சம் அடைந்துள்ளனர்.

பல சோதனைகள், துன்பங்கள் மத்தியில் வடமராட்சி கிழக்கிற்கு இடம் பெயர்ந்திருக்கும் கிழக்கிழங்கை மக்களின் நிலைபற்றி நேரில் அறிந்து கொள்வதற்காக வடமராட்சி கிழக்கிற்கு சென்றோம்.

வடமராட்சி கிழக்கில் நாகர்கோவில் தொடக்கம் கட்டைக்காடு வரை 35 அகதிமுகாம்களில் சுமார் 20 ஆயிரம் அகதிகள் தங்கியுள்ளனர்.

நாகர்கோவில், செம்பியன்பற்று, தாளையடி, மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு ஆகிய கிராமங்களில், தேவாலயங்களிலும், பாடசாலைகளிலும், தனியார் கட்டிடங்களிலும் இந்த அகதி முகாம்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

### மர நிழல்களில்

சுமார் 3 ஆயிரம் அகதிகள் தாளையடி கிராமத்தில் மட்டும் அகதிகளாகத் தஞ்சம் அடைந்திருக்கிறார்கள். தாளையடியில் மட்டும் பத்து முகாம்கள் அமைக்கப்பட்டிருக்கிறது. பாடசாலையிலும், தனியார் கட்டிடத்திலும் இருக்கும் மக்களைவிட அதிகமானவர்கள் மர நிழல்களில் காற்றிலும், பனியிலும் கைக்குழந்தைகளுடன் இருப்பதைக் காணமுடிகிறது.

## அகதி முகாம்களுக்கு ஒரு விஜயம்

தமது சொந்த இருப்பிடங்களை விட்டு அகதிகளாக இங்கு வந்திருக்கும் இவர்களுக்கு தஞ்சம் அடைந்த இடத்தில்கூட மர நிழல்கள்தான் தஞ்சம் கொடுத்திருக்கிறது.

### சுகாதாரவசதி இல்லை

தாளையடியில் றோமன் கத்தோலிக்க பாடசாலை, கத்தோலிக்க தேவாலயம் இரண்டிலும் சுமார் ஆயிரம்பேர் தங்கியுள்ளனர். இவர்களைத்தவிர தனியார் கட்டிடங்களில் 2 ஆயிரம் அகதிகள் தங்கியுள்ளனர். இவர்களுக்கு சுகாதார வசதி என்பது அறவே இல்லை எனலாம்.

மலசலகூட வசதிகள்கூட திருப்திகரமாக இல்லை. தேவாலயத்திலும், பாடசாலையிலும் தங்கியுள்ளவர்கள் அங்கிருக்கும் ஓரிரு மலசலகூடங்களை பாவிக்கிறார்கள். 2 ஆயிரம் பேருக்கு ஓரிரு மலசல கூடவசதி மூலம் சுகாதார நலனை பேண முடியுமா என்பது கேள்விக்குறியே?

அது தவிர தனியார் கட்டிடங்களிலும் மரநிழல்களிலும் தங்கியுள்ளவர்களுக்கு மலசல கூடம் எதுவுமே இல்லை. இதனால் இப்பகுதியில் தொற்றுநோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது.

இவர்களுக்கு நிவாரணம் வழங்கவோ, சுகாதாரவசதிகளை வழங்கவோ இதுவரை எந்த ஒரு தொண்டர் ஸ்தாபனமும் முன்வரவில்லை என்பதை எம்மால் நேரில் அவதானிக்க முடிந்தது.

கால்நடையாகவும், படகுகள் மூலமும் வடமராட்சி கிழக்கை வந்தடைந்த அகதிகளில் ஒருவரான மு. சித்திரசேகரம் என்பவரை தாளையடி அகதிமுகாமில் சந்தித்தோம்.

திருகோணமலை 10-ம் நம்பர் என்னுமிடத்தை சேர்ந்த இவர் மீன்பிடி படகு ஒன்றின் உரிமையாளர். இவரிடம் எப்படி திருமலையிலிருந்து இங்குவந்து சேர்ந்தீர்கள்? இங்கு வரும்போது நீங்கள் சந்தித்த இன்னல்கள்பற்றி கூறமுடியுமா? எனக்கேட்டபோது அவர் சொன்னார்.

கடந்த 13-ந் திகதி இரவு கோட்டையிலிருந்தும், பெரிய பொலிஸ் நிலையத்திலிருந்தும் உவர்மலை பொலிஸ் நிலையத்திலிருந்தும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இரவு 6 மணியளவில் தொடங்கிய இச்ஷெல் தாக்குதல்களுக்கு அஞ்சி அன்றைய இரவை கோடலூர் தேவாலயத்தில் சென்று தங்கினோம். மறுநாள் காலையில் வீடுதிரும்பலாம் என்ற நோக்கத்தில் எந்த உடைமைகளையும் எடுக்காது வீட்டைப் பூட்டி விட்டு தேவாலயத்தில் தங்கிய நாம் அடுத்த நாள் அதிகாலை எமது வீட்டிற்கு போக முடியாது போய் விட்டது.

அடுத்தநாள் அதிகாலை எமது கிராமம் தீப்பற்றி எரிவதை கோடலூர் தேவாலயத்திலிருந்து பார்த்தோம். அதன் பின்னர் நாம் தங்கியிருந்த தேவாலயத்திற்கு அருகிலும் ஷெல் விழுந்தன. அதன்பின்னர் 3-ம் கட்டை என்னுமிடத்திலும் நிலாவெளியிலும் தங்கியிருந்தோம். நிலாவெளியில் மூன்று நாட்கள் நீர்மட்டும் அருந்தினோம். அதன்பின்னர் நிலாவெளியிலிருந்து குச்சவெளியை நோக்கிப் புறப்பட்டோம்.

குச்சவெளி இராணுவ முகாமிலிருந்து ஷெல் தாக்குதல்களும், பீரங்கிப் படகுத் தாக்குதல்களும் நடந்தன. இதனால் அப்பகுதியை கடந்துவர முடியாத நிலை ஏற்பட்டது.

(நாளை தொடரும்)

# யாழ். மாநகர எல்லைக்குள் மட்டும் 8 பாடசாலைகளில் 8314 அகதிகள்

யாழ். மாநகரசபை எல்லைக்குள் உள்ள எட்டுப்பாடசாலைகளில் மட்டும் 8314 அகதிகள் தங்கியுள்ளதாக உத்தியோகபூர்வமாகக் கணிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஒஸ்மானியாக் கல்லூரியில் 1004 பேரும், புதுப்பள்ளி மசுரிதயம் பாடசாலையில் 300 பேரும், புனித பத்திரிசியர் கல்லூரியில் 4000 பேரும், துரையப்பா மகா வித்தியாலயத்தில் 275பேரும், கொழும்புத்துறை செபமாலை மகாவித்தியாலத்தில் 1200 பேரும், சென். ஜோசப் பாடசாலையில் 1400 பேரும், இந்துக்கல்லூரியில் 70 பேரும், பெரியபுல மகாவித்தியாலயத்தில் 65பேரும் தற்பொழுது தங்கியுள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர இங்குள்ள தனியார் வீடுகளிலும், ஆலயங்களிலும் மேலும் ஆயிரக்கணக்கானோர் அகதிகளாகத் தங்கியுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானோர் யாழ். மாநகரப் பகுதிக்குள்ளேயே இடம்பெயர்ந்தவர்களாவர்.

குருநகர், இரண்டாம், மூன்றாம், நான்காம் குறுக்குத் தெருக்கள், சின்னக்கடை, யாழ் பஜார்பகுதி, பெரிய கடைப்பகுதி, கொட்டடி ஆகிய இடங்களிலிருந்து இடம்பெயர்ந்தோரே இவர்களில் அனேகமானவர்கள்.

இது தவிர யாழ். நகர்ப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்தோரில் பெரும்பகுதியினர் கிராமப்புறங்களில் தங்கியுள்ளனர்.

இதேபோன்றே குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்தோரிலும் பெரும்பாலானோர் கிராமப்புறங்களை நோக்கிச் சென்றுள்ளனர். (4, 64 கி)

## தீவுப்பகுதியில் திருடர் கைவரிசை

(காவலூர்)

தீவுப்பகுதிகளிற் பல கடைகள் இரவு வேளைகளில் உடைக்கப்பட்டு உணவுப் பொருட்கள், ரொக்கப்பணம் என்பன திருட்டுப் போயுள்ளன. வேலணை தெற்குப் பகுதியிற் கூட்டுறவுக்கடையொன்றும் உடைக்கப்பட்டுப் பொருட்கள் திருடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (24.கி)

## துர்க்காதேவி மகோற்சவம்

சாவகச்சேரி அருள்மிகு துர்க்காதேவி தேவஸ்தான மஹோற்சவம் 12-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். 20-ம் திகதி தேர்த் திருவிழாவும். 21-ம் திகதி தீர்த்தத் திருவிழாவும், 24-ம் திகதி வைரவர் பொங்கலும், 25-ம் திகதி ஆடிப்பூரவிழாவும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (கி)

## முறைசாரா போதனாசிரியர் கூட்டம்

யாழ். மாவட்ட முறைசாராக் கல்விப் போதனாசிரியர்களுக்கான விசேட கூட்டம் ஏழாம் திகதி காலை பத்து மணியளவில் யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (4கி)

## ஆர்ஜன்ரீனா இறுதிப் போட்டிக்கு

உலகக் கிண்ண உதைப்பந்தாட்ட அரை இறுதிப் போட்டியில் ஆர்ஜன்ரீனா அணி இத்தாலியை 3 : 4 என்ற கோல்கள் (பெனால்டி உதைகள் மூலம்) தோற்கடித்து இறுதி ஆட்டத்தில் ஆட தகுதி பெற்றது,

யூலை 8-ம் திகதி நடைபெறவுள்ள இறுதி ஆட்டத்தில் இங்கிலாந்து அல்லது மேற்கு ஜேர்மனி ஆர்ஜன்ரீனா அணியை எதிர்த்து மோதும். (16கி)

## வீடுகளில் இருந்தால் நிவாரணம் இல்லையாம்

திருகோணமலை, கிளிநொச்சி ஆகிய இடங்களில் இருந்து அகதிகளாக இடம் பெயர்ந்து யாழ்ப்பாணம் வந்து தமது உறவினர், தெரிந்தவர்களுடன் தங்கி இருக்கும் குடும்பங்களுக்கு நிவாரண்ம் கொடுப்பதற்கு பதிவு செய்ய சில கிராம சேவகர்கள் மறுப்புத் தெரிவிப்பதாக தெரியவருகிறது.

ஆரம்பத்தில் இவ்விதம் தங்கியிருந்தகுடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் தற்பொழுது முகாம்களில் தங்கியிருப்பவர்களுக்கு மட்டுமே நிவாரணம் வழங்கப்படுமென தெரிவிக்கப்படுகின்றதாம். (16)

## மூதூர் பொலிஸ் மீது தாக்குதல்

மூதூர் பொலிஸ் நிலையத்தின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதேவேளை மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தை மீண்டும் இயங்கவைக்க முயற்சியெடுக்கப்பட்டுள்ள தாகவும் இதன்பொருட்டு அம்பாறையிலிருந்து 150 பொலிஸார் மட்டுநகர் அனுப்பப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

## கட்டுப்பாட்டை மீறும் 'கூட்டுறவு'

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைகளில் கட்டுப்பாட்டு விலைகளிலும் விட கூடுதல் விலைக்குப் பொருட்கள் இந்த வேளையில் விற்பனை செய்வது குறித்து பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஒரு கிலோ மைசூர் பருப்பின் விலை ரூபா நாற்பத்தாறாக இருந்த போதிலும் ரூபா ஐம்பத்தைந்தாகவும் ரூபா இருபத்தொன்று விற்க வேண்டிய பம்பாய் வெங்காயம் ரூபா நாற்பதாகவும் விற்கப்பட்டது. (ப-3கி)

### சகலரும் பயிற்சி பெறலாம்

## முறைசாரா பிரிவு உதவியுடன் முதலுதவி பயிற்சி முகாம்

யாழ் மாவட்டத்தில் தற்போது நடைபெறும் தாக்குதலால் பாதிக்கப்படுவோருக்கு உதவவும், சொந்தப் பாதுகாப்பிற்கும் முதலுதவிச் சிகிச்சை முறைகளை ஒவ்வொருவரும் தெரிந்திருக்க வேண்டிய அவசியமேற்பட்டுள்ளதால், இத் தேவையை நிறைவு செய்யும் முகமாக மூன்று நாள் பயிற்சி வகுப்புக்களை ஒழுங்கு செய்ய யாழ் கல்வித் திணைக்களம், முறைசாராக்கல்விப் பிரிவு முன்வந்துள்ளது.

இதன் பிரகாரம் யாழ் மாவட்டத்தில் இயங்கும் ஒவ்வொரு கோட்ட மட்டத்திலும் மத்திய ஸ்தானம் ஒன்றில் பயிற்சி வகுப்புகள் ஒழுங்கு செய்யப்படுமெனவும் முறைசாராக்கல்வித் திட்டத்தில் பயிலும் மாணவர்கள் உட்பட பயிற்சி பெறவிரும்பும் எவரும் தமது பெயர், விலாசங்களை கோட்டக் கல்விப் பணிமனையில் அல்லது முறைசாராக் கல்விப் பிரிவில் பதியுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சி நடைபெறும் திகதிகளும், நிலையங்களும் பத்திரிகை மூலமாக வெளியிடப்படுமெனவும், அதன் பின்னர் பயிற்சியாளர்கள் நேரடியாகவே பயிற்சி நிலையத்திற்குச் சென்று பயிற்சியினைத் தொடரலாம் என்றும், தொழில்நுட்பக்கல்வி அதிகாரி ச. சுப்பிரமணியம் தெரிவித்தார். (4 கி)

### கிளிநொச்சியில் திங்கள் நிகழ்ந்த

## பொம்மர் தாக்குதலினால் ஒருவர் பலி; தானியம் நாசம்

கடந்த திங்கட்கிழமை தர்மபுரம் பகுதியில் மீண்டும் பொமமர் தாக்கியதில் ஒருவர் பலியானார்.

இத்தாக்குதலில் பட்டி ஒன்றில் அடைக்கப்பட்டிருந்த கால்நடைகள் கொல்லப்பட்டன. இதில் 70 மாடுகளும் 40 ஆடுகளும் பலியாகின.

மேலும் பலகட்டிடங்களும் வாகனங்களும் தாக்குதலால் சேதமடைந்தன.

அதே தினம் பரந்தனில் மேற்கொள்ளப்பட்ட பொம்மர் தாக்குதலில் நெற்களஞ்சியமொன்று சேதமடைந்தது இதனால் அங்கு சேமித்து வைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான தானியங்களும் சேதமாகின. (35-கி)

## தமிழகம் கிளர்ந்தெழ நடவடிக்கை அவசியம்

### -'மதி' கோரிக்கை

'வடக்கு, கிழக்கில் தமிழர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக, தமிழர்க்கு ஆதரவாக தொடர் உண்ணாவிரதங்களையும், ஹர்த்தால்களையும், சட்டமறுப்பு இயக்கங்களையும் தமிழ்நாட்டில் நடத்தவேண்டும் என்று அ.இ.அ.தி.மு.க. இலங்கைக் கிளை சார்பில் அதன் தலைவர் திரு. பொன். மதிமுகராஜா

தலைவி செல்வி ஜெயலலிதாவைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஸ்ரீலங்கா அரசு தமிழர்க்கு எதிராகக் கட்டவிழ்த்து விட்டுள்ள அட்டூழியங்களை அவர் கடிதம் மூலம் செல்வி ஜெயலலி[illegible]க்கு விளக்

# உணவு தட்டுப்பாடு நீக்க புதிய நடவடிக்கைகள்

யாழ் மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள உணவுப் பொருட் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு பொதுஸ்தாபனங்களும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளன.

பொதுஸ்தாபனங்கள் உணவுப் பொருட்களைப் பெறுவதற்குரிய சகலநடவடிக்கைகளையும் மேற்கொண்டு ஒரு வாரத்தினுள் உணவுப் பொருட்களைப் பெறவுள்ளதாக பொதுஸ்தாபனங்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் யாழ் மாவட்டப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் யாழ் மாவட்டத்திற்கு தேவையான உணவுப் பொருட்களை லொறி மூலம் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளன.

இதன்படி அரிசி, உளுந்து, பயறு போன்ற உள்ளூர் உற்பத்திப் பொருட்களை வெளி மாவட்டங்களில் இருந்து பெற்று யாழ் மாவட்டத்திற்கு விநியோகிக்கவுள்ளன இதன் மூலம் தற்போதைய உணவு நெருக்கடி குறையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (03 ஸ்ரீ)

## வெளிநாடுகளிலும் சிகிச்சை வசதி

# காயமுற்ற படை வீரர்கள் நலனில் ஜனாதிபதி ஆர்வம் காட்டுகிறார்

வடக்குக், கிழக்கில் தற்போது நிகழ்ந்து வரும் யுத்தத்தில் காயமுற்ற, அங்க வீனமடைந்த பாதுகாப்புப் படையினர் விடயத்தில் அதீத ஆர்வம் காட்டி வருகிறார் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸ என்று அறிவிக்கப்படுகிறது.

இந்தவகையில் காயமுற்ற, அங்க வீனமடைந்த வீரர்களை ஒவ்வொருவராகச் சந்தித்து, ஆறுதல் கூற அவர் திட்டமிட்டுள்ளார்.

கிடைக்கின்ற சகல வளங்களும் அவர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்று அவர் பணிந்துள்ளார்.

இத்தகைய படை வீரர்களை உள் நாட்டில் தீவிர சிகிச்சைக்கு உட்படுத்த வேண்டும் அவசியமாயின் அவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி சிகிச்சை வசதியளிக்கப்பட வேண்டும் என்று அவர் அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

நேற்று கொழும்பிலுள்ள இராணுவ வைத்திய சாலைக்கு ஜனாதிபதி சென்று காயமுற்றிருந்த 149 படை வீரரைப் பார்வையிட்டார்.

அவர்களது நாளாந்த தேவைக்கான உணவுப்பொட்டலங்களையும் அவர் வழங்கினார், ஜனாதிபதியுடன் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்னவும் சென்றிருந்தார்.

கண்டிவைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவரும்நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களையும் ஜனாதிபதி பார்வையிட்டார். அவர்களுக்கு அதிவிசேட சிகிச்சையளிக்கப்பட வேண்டும் என்று அவர் பணித்தார்,

அவர்களுக்கும் ஜனாதிபதி உணவுப் பொட்டலங்களை வழங்கினார். (ஸ்ரீ)

## செவ்வாய் இராணுவத்தில் 6 பலி; 11 காயம்

கடந்தசெவ்வாய்க்கிழமைட்டும் வடக்கு கிழக்குப் பகுதியில் இடம் பெற்ற மோதல்களில் ஆறு இராணுவத்தினர் பலியானதாகவும், பதினொருபேர் காயமடைந்ததாகவும் ஏஜன்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

தம்பல காமத்தில் நடந்த சம்பவத்தில் இரு படையினரும், வவுனியாவில் ஒருவரும் பலியானர்கள் என அறிவிக்கப்படுகின்றது. (கி)

## வடக்கு, கிழக்கில் மோதல்கள் தொடர்கின்றன

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திருகோணமலை பகுதிகளில் தொடர்ந்தும் விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீ லங்கா இராணுவத்திற்கும் இடையில் மோதல்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

## இரத்ததானம்

தற்போது அத்தியாவசிய தேவையாக கருதப்படும் இரத்ததானம் செய்ய விரும்பும் பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள் நாளை காலை ஒன்பது மணிக்கு மானிப்பாய் வைத்திய சாலைக்கு சமுகம் தருமாறு யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது, ஓ குறூப் இரத்த முள்ளவர்களே அதிகம் வேண்டப்படுகின்றனர்.

## மோதல்

நேற்று மாலை மயிலிட்டி கட்டுவன் பகுதியில் பலத்த மோதல் இடம் பெற்றது ஹெலியும் தாக்கியது. சேத விபரங்கள் பற்றி தெரியவில்லை. (48)

## வவுனியா உத்தியோகத்தர் அழைப்பு

வவுனியா செயலகம் மற்றும் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள் போன்றவற்றில் கடமைபுரியும் சகல அரச உத்தியோகத்தர்களும் நாளை காலை 10 மணியளவில் நல்லூர்க் கோவிலடிக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

தற்போதைய நிலைபற்றியும், அடுத்த நடவடிக்கை பற்றியும் கலந்தாலோசிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (3)

### திருமலையில்...

யிரம் தமிழ் பேசும் மக்களை அவர்கள் பிடித்து வைத்துள்ளனர்.

சூரன்கல் பகுதியை நோக்கி மற்றொரு வழியால் வந்த படையினரை விடுதலைப் புலிகள் தடுத்துத் தாக்கினர்.

நீண்டநேரம் நடைபெற்ற இச்சண்டையில் பன்னிரண்டு படையினர் கொல்லப்பட்டதுடன் அவர்களிடமிருந்து ரி-52-2 ரைபிள்கள் இரண்டையும் விடுதலைப்புலிகள் கைப்பற்றினர்.

தம்பலகாமம் பகுதியில் படையினர் தொடர்ந்து மேற்கொண்டுவரும் விமானத் தாக்குதல்களையடுத்து திருகோணமலை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அகதிகளாகி வந்து தங்கியிருந்த பல ஆயிரக்கணக்கான தமிழ் பேசும் மக்கள் தமது உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அருகிலுள்ள காட்டுப் பகுதிகளுக்குச் சென்று உணவோ, தங்குமிட வசதியோ இன்றி அவதிப்படுகின்றனர்.

இம்மக்கள் படையினரின் தாக்குதல்களுக்குப் பயந்து அங்குமிங்குமாக இடம் பெயர்ந்து மீண்டும், மீண்டும் தாக்குதல்களுக்கு உள்ளாகிச் சொல்லொணாத் துன்பத்தை அனுபவித்து வருகின்றனர். (ஸ்ரீ)

### பட்டினிச் சாவுக்கு—

பதால் பட்டினிச் சாவை எதிர் நோக்கும் தமிழர்கள் எண்ணிக்கை மேலும் பெருமாளவுஅதிகரிக்கலாம்என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ)

### யாழ் போதனா—

ளதாகவும் நோயாளர்கள் நலன் கருதி வெளி நோயாளர் பிரிவும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த கால வன் செயல்களின்போதும் யாழ்போதனா வைத்திய சாலை பழைய இடத்திலேயே தொடர்ந்தும் இயங்கி வந்தது. எனினும் தற்போது இடம் பெற்ற ஷெல். பொம்மர் தாக்குதலின் அகோரத்தினாலே இவ் வைத்தியசாலை இடம் மாற்றப்பட்டது தெரிந்ததே. (03-ஸ்ரீ)

### நீதியான

தூர் கேட்டுக்கொண்டுள்ளார்.

செஞ்சிலுவைச் சங்கத்துடனோ இலங்கை அரசுடனோ கலந்து பேசி இது தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் வற்புறுத்தியுள்ளார். (ஸ்ரீ)

### யுத்தநிறுத்தம்...

விடுத்தார்.

ஸ்ரீலங்கா வெளிவிவகாரச் செயலாளர் திரு. பெர்னாட் திலகரத்ன புதுடில்லி வந்து நடத்திய பேச்சுவார்த்தைகள் பயனேதும் தரவில்லை என்றும் அவர் சொன்னார். ஸ்ரீ

### பலாலியில்...

பசிட்டி, அச்சுவேலி போன்ற பகுதிகளிலேயே ஹெலிகள் வாகனங்கள் மீதுஇத்தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன. (03)

## 'மில்லர்' காவியம்

மெல்லெனச் சிவந்தது கீழ்திசை வானம்
மேனியைத் தொட்டது சீதளக் காற்று
நெல்வயல் எங்கணும் அசைந்தன பயிர்கள்
நீர்நிலை யாவிலும் குதித்தன மீன்கள்
கல்லென நீ துயில் கொள்ளலும் தகுமோ
கரும்புலி மில்லரின் காவியம் விழுமோ
இல்லையென் றாயிரம் வீரர்கள் எழுந்தார்
இளையவனே! பள்ளி எழுந்தருளாயே!

— புதுவை இரத்தினதுரை

மாவீரன், கரும்புலி கப்டன் மில்லரின் மூன்றாவது நினைவு தினத்தையொட்டி இச்சிறப்புக்கவிதை பிரசுமாகின்றது.

# அரசின் எக்காளம் அடக்கிய கரும்புலி கப்டன் மில்லர்

தமிழீழப் போராட்டத்தில் முதன் முதலாக ஓர் தாக்குதலில் தன்னுயிர் போகும் என அறிந்து கொண்டு தற்கொலைத் தாக்குதல் நடாத்திய மாவீரன் தான் கப்டன் கரும்புலி மில்லர்.

கல்வி வளத்துடன் வீரம் செறிந்த வடமராட்சி மண்ணில் துன்னாலை என்னும் ஊரில் பிறந்தார் மாவீரன் மில்லர்(வசந்தன்). பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் தனது இடை நிலைக் கல்வியை முடிந்த இவர் தமிழ் மண் மீட்பு நடவடிக்கையில் தனது வாழ்க்கையை பின்பு இணைத்துக் கொண்டார்.

''ஒப்பிறேசன் லிபறேசன்'' (Operation Liberation) என்ற தாக்குதல் நடவடிக்கை மூலம் 1987 ஆம் ஆண்டு மே மாதம் வடமராட்சிப் பகுதியை தாம் கைப்பற்றி விட்டோம் என இலங்கை அரசு எக்காளம் இட்டுக்கொண்டுருந்தபோது; 5 ஆம் திகதி 7 ஆம் மாதம் 1987 ஆம் ஆண்டு கரும்புலி கப்டன் மில்லர் தன்னை இம் மண்ணுக்கு அர்ப்பணிக்கும் அந்த வீரத்தியாகத்தை செய்தார்.

மில்லரின் இத்தாக்குதல் தமிழீழப் போராட்டத்தில் ஓர் திருப்பு முனையாக அமைந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளை தம்மால் அழிக்க முடியாது என்பதையும் தமிழீழத்தைத் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாது என்பதையும் இலங்கை அரசு புரிந்து கொண்டது.

இதனாலே இலங்கை அரசு இந்தியஅரசுடன் கூட்டுச் சேர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகலையும் அவர்களின் போராட்டத்தையும் அழிக்க முயன்றது.

தமிழீழ விடுதலைக்காக தன் சாவின் நேரத்தைமுதலே அறிந்து கொண்டு முழுமையாகத் தன்னை அர்ப்பணித்து தாக்குதலை வெற்றிகரமாக நடாத்திய கப்டன் மில்லருக்கும் அவருடன் அத்தாக்குதலில் வீரமரணமடைந்த மேஜர். கமலுக்கும் வின் சென்றுக்கும் தமிழீழ மக்கள் தமது வீரவணக்கத்தை செலுத்துகின்றனர். (9 ஸ்ரீ)

# காங்கேசனில் ஷெல்வீச்சு டீசல் தாங்கிகள் எரிகின்றன

நேற்று காங்கேசன்துறை இராணுவ முகாம பகுதியில் ஏற்பட்ட புலிகள்-இராணுவ மோதலையடுத்து ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதனையடுத்து சிமெந்து ஆலையில் உள்ள இரண்டு பாரிய டீசல் தாங்கிகள் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தன இதனால் அப்பகுதி புகை மண்டலமாகக் காட்சியளித்தது. (03,48)

# பாதணிகளை பாதுகாப்பு படைக்கு அன்பளிப்பு

இலங்கை தோல் உற்பத்திக் கூட்டுத்தாபனம் பாதுகாப்புப் படையினருக்குத் தமது அன்பளிப்பாக பாதணிகளை வழங்கியுள்ளது.

தமது மாதாந்த ஊதியத்திலும் ஒரு பங்கினை இக் கூட்டுத் தாபன ஊழியர்கள் தேசிய பாதுகாப்பு நிதிக்கு வழங்கியுள்ளனர்.

## தேனீக்கள் வேண்டுகோள்

பிற மாவட்டங்களில் இருந்து இடம் பெயர்ந்து யாழ்ப்பாணம் வந்து தங்குவதற்கு இடம் இல்லாது இருப்பவர்களுக்காக திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பிறமாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்து இங்கு வந்து இடம் தெரியாமல் அல்லலுறுபவர்களுக்கு இம் முகாமை அடையாளம் காட்டி உதவுமாறு முகாமை பராமரித்து வரும்'தேனீக்கள்'எனும் யூனிவேர்சல் சமூக சேவைப்பிரிவு பொது மக்களைக் கேட்டுள்ளது.

## பதிவு செய்யவும்

கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்தில் பயிலும் மாணவர்களின் தற்போதைய நிலைபற்றித் தெரியாத பெற்றோர்கள் அம் மாணவரின் பெயர் விலாசம் போன்ற விபரங்களை யாழ் பல்கலைக் கழக கலைப்பீட மாணவ ஒன்றியத்தில் பதிவு செய்யுமாறு வேண்டப்படுகின்றனர்.

## கைது

இந்தியத் தேசியப்பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சென்னையில் நேற்று பதினெட்டு ஈ. பி. ஆர். எல். எப் உறுப்பினர்கள்கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய வானொலி நேற்றுத் தெரிவித்தது.

### விடுதலைப் புலி

செயலாளர் ஈழவேந்தன் இந்திய அரசைக் கோரியுள்ளார்.

பாகிஸ்தான் ஸ்ரீலங்கா அரசுக்கு இராணுவ உதவி செய்ய முடியுமானால் இந்தியா ஏன் விடுதலைப்புலிகளுக்கு பாதுகாப்பு ஆயுதங்களை வழங்க முடியாது என அவர் கேட்டுள்ளார்.

### பலாலியில் சூடு...

றியுள்ள பகுதிகளில் விழுந்து வெடித்தன.

அம் முகாமில் இருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் விடுதலைப் புலிகளின் போராளி ஒருவர் வீரமரணமடைந்தா[illegible]

ப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேட்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு [illegible] 05-7-90 அச்சிட்டு வெளியிடப்பெற்றது,